பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**11 07 2026** **6 45**

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா-நியூசிலாந்து இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. இந்திய பெருங்கடல் பகுதியில் அமைதி நிலவ முதன்மை சக்தியாக இந்தியா திகழ்கிறது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

3. கரூர் மாவட்டத்தில் தோல் அல்லாத காலணிகளை உற்பத்தி செய்யும் ஆலையின் இரண்டாம் கட்ட விரிவாக்கத்திற்கு முதலமைச்சர் திரு. விஜய் நேற்று அடிக்கல் நாட்டினார்.

4. மலைவாழ் மக்களின் கோரிக்கைகள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில சமூகநீதித்துறை அமைச்சர் திரு. வன்னி அரசு கூறியுள்ளார்.

5. இங்கிலாந்துக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதல் இன்னிங்சில் 285 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா-நியூசிலாந்து இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நியூசிலாந்து பிரதமர் திரு. கிறிஸ்டோபர் லக்சனுடன் ஆக்லாந்தில் இன்று காலை பேச்சுகள் நடத்தியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் புதுதில்லியில் கையெழுத்தான வர்த்தக ஒப்பந்தம், இருதரப்பு உறவுகளுக்கு இடையே புதிய உத்வேகத்தை அளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த ஒப்பந்தத்தின்படி இந்தியாவில் இருந்து நியூசிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்படும் அனைத்துப் பொருட்கள் மீதும் 100 சதவீதம் வரிச்சலுகை அளிக்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதேபோன்று நியூசிலாந்தில் இருந்து இந்தியாவிற்குள் இறக்குமதியாகும் பொருட்கள் மீது வரிவிலக்கு குறைக்கப்பட்டுள்ளது என்றும் திரு. மோடி தெரிவித்தார்.

அடுத்த 15 ஆண்டுகளில் 20 பில்லியன் அமெரிக்க டாலர் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது என்றும் பிரதமர் கூறினார்.

அரசுமுறைப் பயணமாக நியூசிலாந்து சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு இன்று காலை ஆக்லாந்தில் உள்ள அந்நாட்டின் அரசு இல்லத்தில் அணிவகுப்புடன் கூடிய மரியாதை அளிக்கப்பட்டது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்தியா - நியூசிலாந்து இடையே வர்த்தகம் மற்றும் பாதுகாப்புத் துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

பிரதமர் இன்று நியுசிலாந்தின் வர்த்தக மற்றும் விளையாட்டுப் பிரமுகர்களுடன் திரு மோடி கலந்துரையாட உள்ளார்.

இரு நாடுகளின் மக்களுக்கிடையே நிலவும் வலுவான உறவை வெளிப்படுத்தும் விதமாக, இந்திய வம்சாவளியினரின் பிரம்மாண்ட கூட்டத்தில் திரு. நரேந்திர மோடி இன்று உரையாற்றவுள்ளார்.

<<<<>>>>

இந்திய பெருங்கடல் பகுதியில் அமைதி நிலவ முதன்மை சக்தியாக இந்தியா திகழ்கிறது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

விசாகப்பட்டினத்தில் இந்திய கடற்படை வீரர்களிடையே நேற்று உரையாற்றிய அவர், இந்தியப் பெருங்கடல் உலகில் முக்கியமான பகுதிகளில் ஒன்று என்று கூறினார்.

இந்தியாவின் வர்த்தகத்தில் 90 சதவீதத்திற்கும் அதிகமானவை கடல் வழியாகவே நடைபெறுகிறது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் எரிசக்தி பாதுகாப்பு, சிறப்பு பொருளாதார மண்டலம் மற்றும் இந்திய பெருங்கடலில் உள்ள தீவுப் பகுதிகள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், கடல்சார் பாதுகாப்புக்கும் முக்கியமானவை என்று அவர் குறிப்பிட்டார்.

உலகில் புவிசார் அரசியல் மற்றும் போட்டி அதிகரித்துள்ள நிலையில், இந்திய கடல் எல்லைகளைப் பாதுகாத்து நாட்டின் வளத்தை கட்டிக் காப்பதில் கடற்படை பெரும்பங்காற்றி வருவதாகவும் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

நாமக்கல் மாவட்டத்தில் முட்டை ஒன்றின் பண்ணைக் கொள்முதல் விலை 6 ரூபாய் 55 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முட்டை விற்பனை வரலாற்றில் நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச கொள்முதல் விலை இது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Kannan — 50 Sec)**

<<<<>>>>

கரூர் மாவட்டத்தில் தோல் அல்லாத காலணிகளை உற்பத்தி செய்யும் ஆலையின் இரண்டாம் கட்ட விரிவாக்கத்திற்கு முதலமைச்சர் திரு. விஜய் நேற்று அடிக்கல் நாட்டினார்.

**850** கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைய உள்ள இந்த திட்டத்தால் **6** ஆயிரத்து **750** பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

உலகளாவிய காலணி உற்பத்தி துறையில் தமிழகத்தின் நிலை மேலும் வலுப்படுவதோடு, கரூர் மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி அதிகரித்து பெருமளவிலான வேலைவாய்ப்பும், ஏற்றுமதியும் பெருகும் என்றும் அரசு கூறியுள்ளது.

மகளிருக்கு அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கும வகையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாகவம் மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் வரை உத்திரவாதமில்லாத கடன் வழங்குவது குறித்து தமிழக அரசு

விரைந்து முடிவு எடுக்கும் என்று மாநில அமைச்சர் திரு. மதன் ராஜா கூறியுள்ளார்.

இராமநாதபுரம் அடுத்துள்ள லாந்தை பகுதியில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரியில் நேற்று நடைபெற்ற தொழிற் கண்காட்சியை திறந்துவைத்து பேசுகையில் இதனை அவர் தெரிவித்தார்.

விரைவில் சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்படவுள்ள பட்ஜெட்டில் பல்வேறு அறிவிப்புகள் வெளியாகும் என்றும் அவர் கூறினார்.

முன்னதாக ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த இளம் தொழில் முனைவோர் மற்றும் மாணவர்கள் தொடங்கியுள்ள ஐந்து புத்தொழில் நிறுவனங்களை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டு துறை கூடுதல் செயலாளர் திரு. ஆதீஷ் குமார் சிங், மாவட்ட ஆட்சியர் திரு. சிவகுரு பிரபாகரன் ஆகியோர் கலந்துகொண்டு கொண்டனர்.

<<<<>>>>

மலைவாழ் மக்களின் கோரிக்கைகள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில சமூகநீதித்துறை அமைச்சர் திரு. வன்னி அரசு கூறியுள்ளார்.

கள்ளக்குறிச்சி அருகேயுள்ள கல்வராயன் மலையில் தாழ்தேவனூர் கிராமத்தில் நேற்று பழங்குடியின மக்களை சந்தித்து அவர்களின் கோரிக்கைகளை அமைச்சர் கேட்டறிந்தார்.

அவர்கள் வழங்கிய மனுவைப் பெற்றுக்கொண்ட அமைச்சர், இதன் மீது உரிய நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கூறினார்.

<<<<>>>>

கரூரில் முதலமைச்சர் திரு. விஜய் கலந்துகொண்ட நிகழ்ச்சியின் நேரடி ஒளிபரப்பை வகுப்பறையில் மாணவர்கள் காணச் செய்த கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியைர் பணியிட நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பள்ளிக் கல்வித்துறை தெரிவித்துள்ளது.

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் அறிவிறுத்தலின்பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கரூர் மாவட்ட பள்ளிக் கல்வித்துறை அதிகாரி திருமதி மல்லிகா தெரிவித்துள்ளார்.

அந்த தலைமை ஆசிரியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், நேற்று முன்தினம் பள்ளிக் கல்வித்துறை வெளியிட்ட சுற்றறிக்கையை மீறும் வகையில் நடந்து கொண்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தின் மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மாநிலத்தின் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதியில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

***இருவரிச் செய்திகள்***

**காஸாவின் வடக்குப் பகுதியில் இஸ்ரேல் நேற்று நடத்திய வான்தாக்குதலில் ஏராளமானோர் காயமடைந்தனர்.**

**------------**

**மியான்மரில் இன்று அதிகாலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 4 புள்ளி ஒன்றாக பதிவானது.**

**------------**

**மும்பை பாந்ரா மேற்குப் பகுதியின், வணிக வளாகத்துடன் கூடிய குடியிருப்பு பகுதியில் ஏற்பட்டுள்ள தீயை அணைக்கும் முயற்சியில் தீயணைப்பு படையினர் ஈடுபட்டுள்ளனர்.**

**------------**

**ஹிமாச்சலப்பிரதேசத்தில் 140 ஆண்டுகள் பழமை வாய்ந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க Bantony கோட்டையில் டிஜிட்டல் அருங்காட்சியகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.**

**------------**

தென்காசி மாவட்டம் செங்கோட்டையில் தனிப் பட்டா வழங்க 10 ஆயிரம் ரூபாய் லஞ்சம் பெற்ற நில அளவையரை லஞ்ச ஒழிப்புக் காவல் துறையினர் நேற்று கைது செய்தனர்.

------------

நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையம் அடுத்துள்ள கண்டிபுதூர் பகுதியில் இடி தாக்கி விசைத்தறிக் கூடத்தில் தீ விபத்து ஏற்பட்டது.

------------

எஞ்சின் கோளாறு காரணமாக சென்னை - ராமேஸ்வரம் விரைவு ரயில் நேற்று மாலை விழுப்புரத்தில் அரைமணி நேரம் நின்று சென்றது.

------------

சேலம் மேட்டூரில் உள்ள அரசு தலைமை மருத்துவமனையில் மாவட்ட ஆட்சியர் திரு. இளம் பகவத் நேற்று நோயாளிகள் மற்றும் பொதுமக்களை சந்தித்து கோரிக்கைகளை கேட்டறிந்தார்.

------------

தேனி மாவட்டம் பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சியர் திரு. வைத்தியநாதன் நேற்று ஆய்வு செய்தார்.

------------

**சென்னை ஆர்.கே. நகர் பகுதியில் வலி நிவாரணி மாத்திரைகளை விற்பனைக்காக வைத்திருந்த 3 பேர் கைது செய்யப்பட்டு அவர்களிடம் இருந்து ஆயிரத்து 200 மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டன.**

------------

**கொல்லத்தில் இருந்து சென்னை செல்லக்கூடிய விரைவு ரயில் தென்காசி மாவட்டம் பாம்புக்கோவில் சந்தை ரயில் நிலையத்தில் இன்று முதல் நின்று செல்லும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

------------

**சென்னையில் திடக்கழிவுகளை தரம்பிரித்து ஒப்படைக்க பொதுமக்களுக்கு மாநகராட்சி நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

------------

***விளையாட்டுச் செய்திகள்***

**இங்கிலாந்துக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதல் இன்னிங்சில் 285 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.**

லண்டனில் நேற்று தொடங்கிய இந்தப் போட்டியில் ஆட்டநேர இறுதியில் இங்கிலாந்து ஒரு விக்கெட் இழப்புக்கு **21** ரன் எடுத்திருந்தது.

-------------

உலகக் கோப்பை கால்பந்து போட்டியின் அரையிறுதிக்கு ஸ்பெயின் முன்னேறியுள்ளது.

லாஸ் ஏஞ்சல்சில் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் ஸ்பெயின் **2-1** என்ற கோல் கணக்கில் பெல்ஜியத்தை வென்றது.

**<<<The End>>>>**